76

76
4-57



# மதுரம்

# இழந்த

# ...ணிக்கம்

...டுத்துரை, ரஸமான செய்திகள்!

THE REGISTRAR OF BOOKS
9 - OCT 1957
MADRAS

0-,6x
N57.
183275

ரேவதியின் அடுத்த தயாரிப்பு

வயது வித்தியாசமின்றி அனைவரும்
படிக்கவேண்டிய அரிய புத்தகம்

ஆபாசமற்ற ஆராய்ச்சி!
பயனுள்ள முயற்சி!!

# பெண்களிடம் என்ன இருக்கிறது?

எம். கே. ஆர். எழுதுகிறுர்.

தனி பிரதி 0-6-0

வியாபாரிகளுக்கு தகுந்த கமிஷன் உண்டு

**ரேவதி பதிப்பகம்**

2/23 சுப்பராயசெட்டி தெரு சென்னை-21.

# மதுரம் இழந்த மாணிக்கம்

தொகுத்தவர்
**எம். கே. ஆர்.**

பிரசுரம் :
**ரேவதி பதிப்பகம்**
2/23 சுப்பராய செட்டி தெரு. சென்னை-21

முதற்பதிப்பு: செப்டம்பர் 57.

# காணிக்கை.

வாழ்க்கையின் அடித்தளத்திலே, வறுமையின் கோரப் பிடியிலே சிக்கி இன்னலுற்று, படிப்படியாக உயர்வடைந்து- நாடு போற்றும் நல்லறிவாளனுக- உதார குணத்திற்கோர் உதாரணமாக- கலைவாணராக- நகைச்சுவை மன்னனுக விளங்கி 49-வது வயதில் காலன் வசம்பட்ட திரு என். எஸ் கிருஷ்ணனின் முடிவு தமிழ் நாட்டினருக்கு ஒரு பேரதிர்ச்சியே ஆகும். கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்- ஒரு சகாப்தம். அந்த சகாப்தம் முடிவடைந்து விட்டது. அன்னரின் குடும்பத்திற்கு இந்த நினைவு மலரை காணிக்கை ஆக்குகிருேம்.

பதிப்பகத்தார்.

விலை 3 அணு

ஜீவோதயம் அச்சகம்-சென்னை-5.

# மதுரம் இழந்த மாணிக்கம்

இன்றைய தமிழ் கூறும் நல்லுலகம் பாரதியைப் பற்றியும், கம்பனைப் பற்றியும், எவ்வளவு தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறதோ அவ்வளவு என். எஸ். கேயைப் பற்றியும் தெரிந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தென்னாட்டானும் ஒரு நாளாவது என். எஸ். கேயைப் பற்றி நினைக்காமல் இருக்க மாட்டான். பட்டித் தொட்டிகளில் வசிக்கும் பாமரன் கூட—அவன் வார்த்தைப்படி—'என். எஸ். கிஷ்டனை' தெரிந்து வைத்து கொண்டிருக்கிறான்!

உறவினர்களுடன் பேசும் போதும், நண்பர்களிடம் தமாஷாகப் பேசும் போதும் கிருஷ்ணன் படங்களில் உபயோகித்த தமாஷ் பேச்சுக்களை கலந்தே பேசுவதும் சிலருக்கு வாடிக்கையாகப் போய் விட்டதும் தெரிந்த விஷயம் தான்!

'என். எஸ்.'—இந்த இரண்டு ஆங்கில எழுத்துக்கள் காதில் விழுந்தவுடன் சற்று அந்த இடத்தில் நிதானித்துப் பார்க்கத்தான் எவருக்கும் தோன்றும். அவ்வளவு மகத்தான பெயரை, புகழை அந்த ஆங்கில வரி வடிவம் ஏற்று தனி மகத்துவம் பெற்று விளங்கி விடுவது ஆச்சர்யகரமான விஷயம்தான்.

பாமரர்களால் 'என். எஸ். கிஷ்டன்', என்றும், படித்தவர்களால் 'கலைவாணர்', 'நகைச் சுவை அரசு' என்ற பட்டப் பெயர்களாலும், கலைத்துறை நண்பர்களால் 'என் எஸ். கே' என்றும், அவரது கலைத்துறை வாழ்க்கைத் துணைவியார் திருமதி செந்தமிழ்விறலி மதுரத்தால் 'ஏம்மா' என்று அன்புடன் அழைக்கப் பெற்றவருமான திரு. என் எஸ். கிருஷ்ணன் அவர்களின் வாழ்க்கைச் சரிதம்—உழைப்

பால் உயர்ந்தவர் பட்டியலில் சேரும் தகுதி பெற்றது. வாழ்க்கைப் பாதையில் முன்னேற்ற மடைய எல்லோருக்கும் வழி காட்டும் ஒரு கலங்கரை விளக்கு.

உலகைத் திருத்திய உத்தமர்கள் வரிசையிலே பேராசிரியர் வ. ரா. அவர்கள் நம் கலைவாணரை வைத்திருந்தார். எவனொருவன் தன் வாழ் நாளினை தொண்டாற்றும் வாய்ப்பாகக் கொண்டு தாம் எந்த துறையில் புகுந்தாலும் தனக்கே உரிய தனித் தன்மையுள்ள ஆற்றலினால் தொண்டிற்கே பயன் படுத்தும் தூய நோக்கம் பெற்று உழைப் போரே உலகைத்திருத்திட வந்த உத்தமர்களாவார்கள். நம் நகைச்சுவை அரசு-கலைத்துறையிலே பணியாற்றினார் அதன் மூலம் சீரிய கருத்துக்களை பெரும் அளவுக்கு அவர் வழங்கினார் கலை அவருக்கு ஒரு கருவியாக அமைந்தது அதன் மூலம் நாட்டைத் திருத்தும் நல்ல பணியில் தன் இறுதி மூச்சு வரை உழைத்தார் நாட்டினர் நெஞ்சில் நிறைந்து விட்டார்.

நாகர் கோவில் அருகில் இருக்கும் ஒழுகிண சேரியில் சுடலையாண்டிப் பிள்ளைக்கு மகனாகப் பிறந்தார், கிருஷ்ணன். இவருக்கு ஒரு தம்பியும், தங்கையும், மூன்று அக்காளும் இருக்கின்றனர். தபால் வண்டியில் வேலை பார்த்து வந்த சுடலையாண்டிப் பிள்ளைக்கு சொற்ப வருவாயே இருந்த போதிலும், ஐந்து குழந்தைகளையும், அருமை மனைவியையும் காப்பாற்றும் பெரும் பொறுப்பில் உழன்று வந்தார்.

கிருஷ்ணனுக்குப் புத்தி தெரிய வந்ததும், தன் குடும்ப சூழ் நிலையை உணர்ந்தார். வீட்டிற்கு இவர் தானே பிள்ளைகளில் மூத்தவராயிற்றே. எப்படியாவது சம்பாதிக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். இந்த நிலையில் அந்த ஊரில் நாடகம் வேறு நடந்து கொண்டிருந்தது அதைப் பார்க்க வேண்டும் என்ற அவா வேறு அவரை பலமாக பிடித்து கொண்டது. கையிலோ காசில்லை அவருள் உறங்

கிக் கொண்டிருந்த குயுக்தி எண்ணம் அப்போதுதான் முதன் முதலாக விழித்துக் கொண்டது.

நாடகம் பார்க்கும் பெரிய மனிதர்களின் தாகத்தை தணிப்பதற்கு வேண்டிய உபகரணங்களை—அவர்கள் இருக்கும் இடத்திற்கே கொண்டு சென்று வினியோகிக்கும் வேலையை ஏற்றுக் கொண்டார். அங்கிருக்கும் கடைகளில் இருந்து அவர்களுக்கு வேண்டியவைகளை வாங்கிக் கொடுத்து—அதில் கிடைக்கும் சில்லரை கமிஷன்களைப் பெற்றுக் கொண்டு நாடகங்களையும் பார்த்துக் கொண்டு, வருவாயையும் பெற்று வந்தார். இந்த வியாபாரத்தின் மூலம் அந்தப் பெரும் குடும்பத்தின் வயிற்றை நிரப்ப முடியுமா? அதற்கு, இன்னொரு வழியையும் கண்டு பிடித்தார்.

நாடகக் கொட்டகையில் கிடைக்கும் சில்லறை கமிஷனைக் கொண்டு தினுசு தினுசான சாமான்களை கொஞ்சம் கொஞ்சம் வாங்குவார். வெல்லம், மாவு, தேங்காய் இதர தினுசுகள் இதை எல்லாம் வாங்கிக் கொண்டு வந்து தானே வீட்டில் அடுப்பை மூட்டி பெயர் தெரியாத சில பக்ஷணங்களை செய்து விற்பார். இது அவரது வருவாயை கொஞ்சம் பெருக்கிடத்தான் செய்தது இந்த தமாஷ் வியாபாரத்தை பர்த்ருஹரி படத்தில் 'பெரிய மனிதர்' குஞ்சித பாதத்திற்குச் சொல்லிக் கொடுத்திருப்பதை இப்போது நேயர்களுக்கு நினைவு படுத்துகிறேன்.

கிருஷ்ணனுக்குப் பிறவி குணம் ஒன்று அவரது கடைசி காலம் வரையில் விடாப்பிடியாக அவருடனேயே இருந்து வந்தது, அதுதான் தன் கையிலிருப்பதை பிறருக்கு செய்து விடுவது. இதனல் சில சமயங்களில் அவர் சம்பாதித்த பணம் வீட்டிற்குப் போகும் வரையில் கூட அவர் கையில் தங்கி இருந்ததில்லை.

பார்த்தார் கிருஷ்ணன் போதுமான சம்பாத்தியமோ இல்லை, வீட்டில் தான் ஒரு பாரமாக உட்கார்ந்திருக்க விரும்பாதவராக, நாகர் கோவிலுக்கு வந்திருந்த நாடகக் கம்பெனியுடன் சேர்ந்து புறப்பட்டு விட்டார். கிருஷ்ணனது இயற்கை குணங்கள் அவரைப் பிறவியிலேயே ஹாஸ்ய நடிகராக்கி விட்டது. அந்தக் கம்பெனியில் தான் இன்றைய நாடக நடிகர்களான டி. கே. எஸ். சகோதரர்களும் இருந்தனர். சிறிது காலத்துக்கெல்லாம் அந்தக் கம்பெனிக்கு மூடு விழா நடந்தது அப்போது உதயமானது தான் டி. கே. எஸ். நாடகக்கம்பெனி அதில் பிரதம ஹாஸ்ய நடிகர் நம் கலைவாணர் தான். நாடகம் பார்த்தவர்களுக்கு அப்போதே 'என். எஸ். கிருஷ்ணன்' மேலே ஒரு கண் விழுந்து விட்டது.

*1934-35*-ல் நடிகர் எம். கே. ராதாவின் தந்தை கந்தசாமி முதலியார் சதி லீலாவதி படத்திற்காக ஒப்பந்தம் செய்து கொண்டு வந்தார் அதில் கிருஷ்ணன் எம். எஸ். முருகேசன், ஆகியோர் நடித்துள்ளனர் ஆனல் இதற்கு முன்னர் வெளிவந்தது மேனகா தான் ஜுபிடர் பிக்சர்ஸார் தயாரித்த மேனகாவில் சாமா ஐயர் வேடத்தில் தோன்றி இருக்கிறார்.

இதில் என்ன விசேஷம் என்றால் மேனகா பாட்டு புத்தகத்தில் சிலவற்றில் நம் கலைவாணரின் பெயர் விடுபட்டுப் போயிருப்பதுதான்! அப்படி இருந்தும் ரஸிகர்களின் பார்வையிலும் படத்தயாரிப்பாளர்களின் பார்வையிலும் கிருஷ்ணன் பட்டார், இதற்கு அடுத்து ராஜா சாண்டோ டைரக்ஷனில் தயாரான வசந்த சேனவில் கிருஷ்ணன் நடித்தார் டி. ஏ. மதுரமும், அந்த படத்தில் நடித்தார். ரத்னவளியில் தோழியாக நடித்த டி. ஏ. மதுரம் வசந்த சேனவில் தான் கிருஷ்ணனுடன் ஜோடியாக நடித்தார். ஸெட்டில் நடந்த பல

தமாஷ் சம்பவங்களும் ராஜா சாண்டோவின் புத்திமதியும், கிருஷ்ணன் மதுரம் ஜோடி ஏற்பட சந்தர்ப்பம் வாய்த்தது பார்ப்பதற்கு பொருத்தமாக பட்டது. ஸ்திரமான புகழை இந்த ஜோடி அடையப் போகிறது என்ற ஹேஸ்யங்கள் வேறு கிளம்பின. பின்னர் படத்துக்குப் படம் புகழ் அவர்களை சரணடைந்தது. துண்டு துண்டாக காமிக்கை எடுப்பதை நிறுத்தி, கதையை ஒட்டியவாறு கொண்டுபோன பெருமை கலைவாணருக்குத்தான் உரியது. கதை வசனம் பாடல் ஆகியவற்றை அவரே தயாரிக்க ஆரம்பித்தார். சினிமா நுணுக்கங்களையும் தெரிந்து கொண்டார். என். எஸ். கே, கோஷ்டி பெரியதாக வளர்ந்தது. நாகம்மாளை மணந்து கொண்டார் நாகர் கோவிலில் 'மதுர பவனம்' உதயமாயிற்று சொந்தத்தில் அசோகா பிலிம்ஸ் கோவையில் ஏற்பட்டது. ஸ்ரீரங்கத்தில் கிருஷ்ண பவன் உண்டானது இது மதுரத்திற்காகக் கட்டப் பட்டது.

ஸ்ரீ என். எஸ் கிருஷ்ணனின் உதவியை அநேகர் பெற்றிருக்கின்றனர். சக நடிகர்கள் மாணவர்கள், ஏழைகள், கோவில்கள் எத்தனையோ திருமணங்களை இவர் நடத்திவைத்திருக்கின்றார் இவர் முயற்சியால் நக்ஷத்திர மானவர்களின் தொகை இன்றைய நிலையில் ஏராளம். குறிப்பாக கே. ஆர். ராமசாமி எம். ஜி. ஆர், தங்கவேலு, வி. ஆர். ராஜகோபால், காகா ராதாகிருஷ்ணன், பாண்டியன், டி. ஏ. ஜெயலக்ஷ்மி. எம். என். ராஜம், சஹஸ்ரநாமம் ராஜேந்திரன் ஆகியோர்.

படமுதலாளிகளுக்குச் சிரமம் கொடுக்காமல் படத்திற்கு வேண்டிய காமிக்கை சப்ளை செய்வதில் தனித்திறமையுடன் கடைசி வரையில் விளங்கி வந்தார். இவரது சம்பந்தப்பட்ட எதுவும் இவராலேயே கவனித்து கொள்ளப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

எல்லோரிடமும் தாராளமாகப் பழகுவார் தொழிலாளி கஷ்டம் தெரிந்தவர். சாதாரணமாகப் பேசும்போதே இயற்

கையான ஹாஸ்யம் அவரது பேச்சில் பளிச்சிடும். தான் ஒரு ஹாஸ்ய நடிகன் என்ற நினைப்பு அவருக்கு கொஞ்சமும்கிடையாது. திறமை எங்கிருந்தாலும் அதற்குத் தலை வணங்கி உரிய மதிப்புத் தருவதில் பின் வாங்கியதில்லை.

படப்பிடிப்பின் :சமயத்தில் வீண்கால தாமதம் ஏதும் செய்ய மாட்டார். குறிப்பிட்ட நடிப்பு வரும் வரையில் எந்த நடிகரையும் அவர் விடமாட்டார். வெறும் 'காமா சோமா' வென்று படத்தை பிடித்து டப்பாவுக்குள் அடைத்து விடுவது என்பது அவருக்குப் பிடிக்காத விஷயம்.

ஒரு சமயம்

எனெஸ்கே. பிலிம்ஸின் பணம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. இன்றைய பிரபல நக்ஷத்திரமான தங்கவேலு அதில் கதாநாயகனின் தந்தை பாகம் ஏற்றிருந்தார். குறிப்பிட்ட ஒரு காட்சியின் போது தங்கவேலு தனக்களிக்கப் பட்ட வசனத்தை நாலைந்து முறை தவறுதலாகப் பேசி 'ரீ-டேக்' எடுக்க வைத்து விட்டார். பொறுமை இழந்த என், எஸ், கே. தங்கவேலுவிடம் சென்றுர் அவருக்கு ஒட்டவைத்திருந்த மீசையில் பாதியை பிய்த்து எடுத்துக்கொண்டு வந்து விட்டார். 'இதோபாரு நீ சரியாக டயலாக் பேசினுத்தான் இந்த பாதி மீசை உனக்கு வரும். இல்லா விட்டால் இப்படியேதான் நீ நடிக்கனும் என்று செல்லி உட்கார்ந்து விட்டார்' பிறகு கேட்பானேன் தங்கவேலுவுக்கு வசனம் சரியாக வந்தது படப்பிடிப்பும் தொடர்ந்து நடைபெற்றது இப்படி நடிகர்களிடம் நகைச்சுவையாகவே பேசி நல்ல நடிப்பை வரவழைக்கும் திறன் நம் கலைவாணரைத் தவிர வேறுயாரிடம் எதிர் பார்க்க முடியும்.

சினிமாத் தொழிலில் பேரும் புகழும் பெற்ற போதிலும் நாடகத் தொழிலை அவர் மறந்து விடவில்லை யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை நடத்திவந்த நாடகக் கம்பெனியை

வரங்கி என். எஸ். கே. நாடக சபாவாக மாற்றி திறம்பட நடத்தி வந்தார்,

நாகர் கோவிலில் உள்ள அசோகா டாக்கீஸ் நம் கலை வாணரின் குடும்பத்திற்கு ஓரளவு உதவி வரும் வகையில் இனி விளங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

சதிலீலாவதியில் தன் சினிமா பிரவேசத்தைத் துவக்கிய கலைவாணர், அதற்குப் பிறகு படிப் படியாக பல படங்களில் தொடர்ந்து நடித்து வந்தார் என்பதைத் தவிர விசேஷமாகக் குறிப்பிட எதுவுமில்லை. ஆனால், அவரது குணபாவங்கள், சீர்திருத்தக் கருத்துக்கள், உயர்ந்த தத்துவங்கள் எல்லாம் அவர் நடித்த படங்களில் இருந்து நாம் தெரிந்து கொள்ளலாம் தனிப்பட்ட முறையில் அவரைப் பற்றி நாம் தெரிந்து கொள்வதைவிட அவரது படங்களின் மூலம் அவரை நன்கு புரிந்துகொள்ள முடியும்.

கிந்தனார்–அவரது உயர்ந்த எண்ணத்துக்கு ஆழ்ந்த அறிவுக்கு எடுத்துக்காட்டு.

ஐம்பதும், அறுபதும் புரட்சிகரமான கருத்துக்கள் கொண்ட நல்ல கற்பனை. மனோரதத்தில் நம்மை எல்லாம் ஏற்றி சென்று வருங்கால தமிழகத்தைக் காண வைத்த தீர்க்கதரிசி கலைவாணர் என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்காது.

'கீமாயணம்' நடத்தி பலரது வெறுப்புக்கு ஆளானார் எம். ஆர். ராதா, ஆனால் 'கிந்தனார்' நடத்தி பாகுபாடின்றி எல்லா வகுப்பினரும் ஆண், பெண், பாலர், அனைவரின் பாராட்டுதலையும் பெற்றார் என். எஸ். கே. காரணம் என். எஸ் கே. பாணி-நகைச்சுவையை முக்கியமாகக் கொண்டது. பொதுஜன ருசியை நன்குணர்ந்து அதற்கேற்ப தன் கிந்தனாரை நடத்தினார்.

கலைத்துறைக்கோர் காவலனாகவும் நகைச்சுவைக்கோர் அரசனாகவும், விளங்கிவந்த என். எஸ்.கேவை தமிழ்நாடு சில ஆண்டுகள் பிரிய நேர்ந்தது. அப்பப்பா! அந்த சில ஆண்டுகளில் தமிழ் அறிந்தோர் ஹாஸ்ய விருந்துக்கு ஏங்கினர். கலைவாணரின் விடுதலைக்காக கருணை கோரினர், மகஜர்கள் குவிந்தன கண்ணீர் விட்டனர்,

கண்ணீர் வீண் போகவில்லை, கலக்கம் மறைந்தது, ஓர் நாள். ஆனந்தக் கண்ணீர் பெருக்கோட கலைவாணரை வரவேற்றனர், வாழ்த்துக் கூறினர், விருதுகள் குவிந்தன ஹாஸ்யத்துக்கே முக்கியத்தும் அளித்துவந்த என். எஸ். கே, சமுதாய துறையிலே சீர்திருத்தங்கள் செய்ய முற்பட்டார், பொது மேடைகளில் அவர் குரல் முழங்கியது, விழாக்களில் தலைமை தாங்கினார். பேச்சிலே புதுமை! கருத்திலே சிறப்பு, சேவை. மனப்பாண்மை, தென்பட்டது. 'நாட்டுக்குச் சேவை செய்யும் நாகரீக 'கோமாளி'யாக மாறினார் என். எஸ் கே. அவரது தயாரிப்பாக பைத்தியக்காரன், நல்லதம்பி ஆகியவைகள் வெளிவந்தன. அடுத்து மணமகள், பணம் அவரது டைரக்ஷனில் வெளிவந்தன. இந்தப் படங்களில் எல்லாம் வாழ்க்கையின் அன்றாடப் பிரச்னைகளுக்கான வழிகளை அவர் காட்டினார்.

கலைஞனுக்கு உரிய கௌரவத்தை அவர்கள் வாழ் நாளிலேயே பெறுவதற்கான முயற்சிகளை செய்ய ஆரம்பித்திருக்கும் தமிழர்கள் நம் கலைவாணரைப் பாராட்டி, பொன்னாடைப் போர்த்தி கௌரவித்தனர். பாராட்டுதலுக்கு உரியவரான இவர் மற்றவர்களையும் பாராட்டத் தவறவில்லை எண்ணற்ற நடிகர்களை தோற்றுவித்த நாடக ஆசிரியர் யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளைக்கு 'நாடக விவசாயி' என்ற பட்டம் வழங்கி கௌரவித்தார். தன் 'காரோட்டுபவருக்கு ஒரு பாராட்டு விழா' நடத்திய பெருமையும் இவருக்கு உண்டு.

சோவியத் ரஷ்யாவுக்கு விசேஷ அழைப்பின் பேரில் சென்றிருந்த கலைக்குழுவில் இவரும் சென்றிருந்தார் ரஷிய மக்களின் பாராட்டுதலுக்கு உரியவராக விளங்கினார், இயற்கையின் கோரவிபத்தான புயல் நிவாரணத்துக்கு பாடுபட்டு நன்கொடை அளித்ததை தமிழர்கள் எவரும் மறக்கமாட்டார்கள்; உழைப்பின் மூலம், மற்றவர்களுக்கு உதவி புரிவதையே தன் வாழ்க்கையின் லக்ஷியமாகக் கொண்டு கடைசி மூச்சு வரையில் கலைவாணர் பணி புரிந்து வந்திருக்கிறார்.

கலைவாணரின் சகோதரர் திரவியம் தயாரித்து வெளியிட்டுள்ள சமீப வெளியீடான விஜயா பிலிம்ஸின் 'யார் பையனி'ல் என். எஸ். கே. இதுவரை ஏற்காத புதுமுறையாக கதாநாயகனின் தந்தையாக திறம்பட நடித்து இருக்கிறார். ஆனால், அந்தோ, கண்ணில்லா அந்தக் காலன் அதுவே அவர் கடைசி படமாக இருக்கும் நிலையை ஏற்படுத்தி விட்டானே!

நாகர்கோவிலில் அவர் எழுப்பிய காந்தி ஸ்தூபி கலைவாணரின் பெயரை என்றென்றைக்கும் நிலைத்திருக்க வைக்கும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.

நகைச்சுவை அரசு என். எஸ். கே. அவர்கள் படுத்த படுக்கையாக ஆஸ்பத்திரியில் இருந்தபோதிலும் நகைச்சுவையை அவர் மறந்தாரில்லை. உடன் பிறப்பான நகைச்சுவை அங்கும் வெளிப்பட்டிருப்பதை எண்ணி நாம் வியக்காமலிருக்க முடியாது என். எஸ். கேவுக்கு புதுரத்தம் தேவை என்று டாக்டர்கள் கூறியதைக் கேட்டு, அவர் வீட்டில் இருக்கும் நபர் ஒருவர் தான் ரத்தம் தருவதாக முன் வந்ததைக் கண்டு 'ஏம்பா, நீ வேலை செய்றது கஷ்டமா இருக்கா ரத்தத்தைக் கொடுத்துட்டு என் பக்கத்திலே படுத்துக்கலாம்னு பார்க்கிறியா? என்றார். எதைக்கண்டு நாம் அழுவது?

183225

காலதேவனின் கருணையற்ற செயல் நம் கலைவாணரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. அவரது பூதவுடல் இனி நம் கண்ணுக்குத் தெரியாது. தென்னிந்திய நடிகர் சங்கம் நிறுவ இருக்கும் கலைவாணரின் சிலை, பறிகொடுத்த நமக்கு ஆறுதலாக அமையும்.

'கனி குலுங்கும் மரம், கடும் புயலால் வீழ்ந்துவிட்ட மாதிரி' யில் கலைவாணரின் மறைவு தமிழ் நாட்டுக்கு ஒரு பேரதிர்ச்சியே ஆகும். உழைப்பால் உயர்ந்து, ஊருக்கு உழைத்த வள்ளல், கருணாமூர்த்தி, கலைத்துறைக்கோர் காவலன், நகைச்சுவைக்கோர் அரசன், நக்ஷத்திரங்களை உற்பத்தி செய்த பல்கலைக் கழகம், வீழ்ந்து பட்டது. தேம்பும் நம் உள்ளத்துக்கு தேறுதல் சொல்ல காலம்தான் வழி காட்ட வேண்டும். இந்தத் தலைமுறையில் தனித்து விளங்கும் துருவ நக்ஷத்திரமாக விளங்கிய கலைவாணர் தமிழர்கள் நெஞ்சில் தனி இடம் பெற்றுவிட்டார்.

வாழ்க அவர் நாமம்: மறைந்த நம் கலைவாணருக்கு அஞ்சலி செய்வோம் வாருங்கள்.

தமிழ் நாட்டில் ஒரே ஒரு என். எஸ். கிருஷ்ணன் தான் உண்டு. மேலைய நாட்டில் சார்லிசாப்ளின் போன்ற சிறந்த நடிகரும் தனியாக மேடை மீதிருந்து பல்லாயிரக் கணக்கானவர்களை மகிழ்வித்தது கிடையாது ஆனல் என். எஸ். கே. ஒருவரே இந்த அரும் பெரும் சாதனையைச் செய்த ஒப்பற்ற நடிகர்

டி. எஸ். துரை ராஜ்

★

கலையுலகக் காவலன் இறந்தார். இந்த மாபெரும் நஷ்டத்தை நாம் ஈடு செய்வது என்பது இயலாத ஒன்றாகும் இனி நமது கலைவாணரைப் போன்ற உயர்ந்த நகைச்சுவை நடிகரைக் காண்பதரிது. பேராற்றல் மிக்க அந்த கலைஞர் உலகக் கலைஞராக விளங்க வேண்டியவர் லட்சக் கணக்கான ரூபாய்களை வள்ளல் தன்மையோடு வாரி வழங்கினர்

ஈடு செய்ய முடியாத ஒரு மாணிக்கத்தை நாம் இழந்து விட்டோம்.

—எம். ஜி. ஆர்.

ஹாஸ்யம் ததும்பும் 'டயலாக்கை' செட்டுக்கு வெளியே எழுதிபடித்துக் கொண்டிருப்பார் செட்டுக்குள் சென்றவுடன் அதைவிடப் பன்மடங்கு ரசிக்கக் கூடிய அளவில் சூழ்நிலைக் கேற்ற படி மாற்றி அமைத்துப் பேசும் ஆற்றல் பெற்ற ஒரே நடிகர் என். எஸ். கிருஷ்ணன் இறந்துவிட்டார் இது ஒரு மகத்தான நஷ்டம். 'லேனா' செட்டியார்

கலைவாணர் என். எஸ். கே. மறைந்தார் என்ற சோகச் செய்தி கேட்டேன் திடுகிட்டேன் தாங்கொணாச் சோகம் கப்பிக் கொண்டது. தமிழகத்தின் இன்றைய எழுச்சிக்கு கலைத் துறையின் மூலம் ஒப்பற்ற பணிபுரிந்த கலைவாணரை தமிழ் மக்களுக்கு, சிரிப்புடன் சிந்தனை செல்வத்தையும் வழங்கிய பகுத்தறிவுக் களஞ்சியத்தை ஏழை எளியோரின் துயர் நீக்கி வாழ்வை ஒப்படைத்த உத்தம கலைஞரை தனக்கென வாழா பெருந்தகையை எனது கெழுதகை நண்பரை இழந்து விட்டேன் என்ற நிலையை எங்ஙனம் தாங்கிக் கொள்வேன்? ஈடு செய்ய இயலாத இந்த இழப்பால் வாடும் தமிழ் மக்களுக்கு யாரே ஆறுதல் கூறுவார் —சி. என். அண்ணாதுரை

துக்கத்துக்கு ஆறுதல் கடிதம் எழுதியோ நேரில் கண்டு பேசியோ சமாதானம் சொல்வது இயலாத காரியம் எத்தனைபேர் பங்கு கொண்டாலும் கொள் முதல் குறையாது கிருஷ்ணன் காலிசெய்த இடத்தில் வேறுயாரும் புகுந்து புகழ் பெற முடியாது [illegible]ராஜாஜி

கலைவாணர் என். எஸ். கே. அவர்களைப் போ[illegible]ன வளஞ் செறிந்த ஒரு கலைஞனை இனித் தமிழ[illegible]ா என்பது சந்தேகந்தான் அவர் கலைஞர் மட்டும[illegible] ரசிகரும் கூட எல்லாக் கலைஞர்களும் அவரது [illegible] பெற்று வளர்ந்தனர் தேடிய பொருளை நல்ல மு[illegible] களுக்காகச் சிலவிடவும் அவருடைய பரந்து வி[illegible] தில் இடமிருந்தது அவரது ஆன்மா சாந்தி [illegible] கிறேன். டி. [illegible]

என், எஸ் கே. சரியான தருணத்தில் இறந்தார் இன்னும் இவ்வஞ்சக உலகில் இருந்து அவதிப்படாமல் இறந்தது எவ்வளவோ மேல் இருக்கும் போது இந்த உலகத்தில் ஒரு உபாத்தியாயராக இருந்தார் இறந்தும் அந்தப் பதவியை வகிக்கிருர்.

—எம். ஆர். ராதா

எனது நண்பர் என். எஸ். கிருஷ்ணன் இவ்வுலகத்திலிருந்து மறைந்தார் அவரை சிறு பால்யம் முதல் எனக்கு தெரியும் சிறுவனுக ஒரு நாடகத்தில் நடித்ததை நான் பார்த்த போது இப்பிள்ளை நல்ல ஹாஸ்ய நடிகனுவான் என்று கூறியது எனக்கு நினைவு வருகிறது அவரது இயற்கை குணம் இந்த பாகத்தை எப்படி நடிக்கவேண்டும் என்று சொன்னல் அதன் படி நடிப்பதுடன் அதற்கு மேல்யுக்தி செய்து நன்கு நடிப்பார் நாடகங்களிலும் பேசும் படங்களிலும் அவர் வகித்திருந்த இடம் அவரைப் போன்ற சிறந்த நடிகர் ஒருவரால் நடிக்கப்பட எத்தனை வருஷங்களாகுமோ நான் அறியேன்.

—நாடகப்பேராசிரியர் சம்பந்தம்

கலை என்பது உடல் போன்றது அதற்கு உயிர் கற்பனை தான் அந்தக் கற்பனை போய் விட்டது இதோ உடல் மட்டும் கிடக்கிறது.

—உடுமலை நாராயணகவி

கலைவாணர் லட்சம் லட்சமாகச் சம்பாதித்தார்: அதைப் போல பல மடங்கு கை சிவக்க சிவக்க வாரி வழங்கினர், தனக்கு நடிக்க வரும் என்று எவர் அவர் வீடு தேடி சென்ருலும் அவர்களுக்கு உணவும், கைச் சிலவிற்குப் பணமும் கொடுத்துவந்த வள்ளலாகவே கடைசி நேரம் வரையில் இருந் ... தார்.

... ஜெனரல் ஆஸ்பத்திரியில் படுத்தபடுக்கையாகக் ... நேரத்திலும், தன் தலையணைக்கு அடியில் ஒரு ... டு கட்டுக்களை வைத்துக் கொண்டிருந்து தன்னை ... நபர்களுக்குத் தகுதி அறிந்தளித்தஅந்த உள் ... குணத்தை இனி நாம் காணப் போகிருேமா? ... த்தான் சீதக்காதி என்று கேள்விப் பட்டிருக்

கிறேம். மரணப் படுக்கையில் கிடக்கும்போதுகூட, பணத்தை வழங்கிய அந்த தன்மை நம் கலைவாணருக்கு அல்லது வேறு யாருக்குத்தான் வரும்.

இன்னெரு சம்பவம்,

கலைவாணர் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் புறப்பட்டு கோண்டிருக்கிருர், வேளியே வந்து காரில் ஏறப்போகும் சமயம் யாரோ ஒரு நபர் இவரைக் காண வந்தார், வந்தவர் முகத்தைப் பார்த்தார் கலைவாணர், நிலைமையைப் புரிந்து கோண்டார், தன் பாக்கெட்டில் கையை விட்டு பணத்தை எடுத்தார், ஆறுபத்து ரூபாய்நோட்டுகள் அவர் கையில் வந்தது, அதில் நாலு நோட்டுகளை அவரிடம் கொடுத்து 'இதை வைத்துக் கோள் நான் ஆஸ்பத்திரிக்குப் போகிறேன், வந்து தருகிறேன்' என்று கூறி பணத்தை அந்த நபரிடம் கோடுத்திருக்கிருர். 'போய் வருகிறேன்' என்று கூறியவர் திரும்பாமலே போய் விட்டாரே ! ஆஸ்பத்திரிக்குச் சேல்லும்போதும், கையில் இருப்பதை பாகுபடுத்தி வழங்கிய அந்த உள்ளம் கருணை உள்ளத்தை இனி எப்போது காணப் போகிறேம் என்று அழுவதைத் தவிர நம்மால் வேறு என்ன சேய்ய இயலும்?

பசி என வந்தோரைப் புசி எனக்கூறி உணவளித்து அவர்கள் உண்பதைக் கண்டு மனமகிழும் பண்பு படைத்தவர் கலைவாணர். 'வயிற்றுக்காகத்தானே வேலை செய்கிறேம். பசித்தால் எந்த வேலையும் ஓடாது' என்று கூறுவார் நகைச் சுவை அரசு. பசித்தவர்களுக்கு உணவளித்த அந்த ஏழைப் பங்காளனின் உதார குணத்தை இங்கே பாருங்கள்:

நாடகத்துக்காக காரில் சென்று கோண்டிருந்தார் கலைவாணர், விழுப்புரத்தைத் தாண்டி சேல்லும்போது காலை நாலரை மணி இருக்கும், வீதியிலே இருபது முப்பதுபேர், கைகளிலே மண்வேட்டி, கடப்பாறை, அறிவாள், சகிதம் சாலையில் நின்று கோண்டிருப்பதைக் கண்டார். கதவைத் திறந்து

கீழே இறங்கினர் என். எஸ். கே, அவர்கள் எல்லோரும் அவரை அடையாளம் கண்டு கொண்டனர், என்ன விஷயம் என்று விசாரித்த அவருக்கு, ஒருவன் வேலைக்கு வரச்சொல்லி விட்டு, அங்கு போனதும் வேண்டாம் என்று கூறி அனுப்பி விட்டான் என்ற செய்தியைக் கூறினர்கள். பசியோடு பல மைல்கள் நடந்து வந்திருப்பதைக் கண்ட கலைவாணர், ஒரு நூறு ரூபாய் நோட்டு எடுத்து மானேஜரிடம் கொடுத்து பக்கத்தில் இருக்கும் ஊரில் எந்த ஹோட்டலிலாவது நிறைய இட்டிலி சட்னி, சாம்பார் வாங்கிவரச் செய்து அவர்களுக்கு தன் கையாலேயே அளித்து போதுமென்ற அளவுக்கு திருப்தியுடன் சாப்பிட வைத்தார். அத்துடன் தன் கையிலிருந்து முப்பது ரூபாயை கொடுத்து அவர்களை பங்கிட்டுக் கொள்ளவும் என்று சொல்லி சென்றிருக்கிறர்.

"நம் நாட்டில் பட்டினி இல்லை ஏழைகள் இல்லை பிச்சைக் காரர்கள் இல்லை திருடர்கள் இல்லை என்ற நிலை ஏற்படவேண்டும், அந்நிலையைப் பார்த்துவிட்டே இறக்கவேண்டுமென்பதே என் இதய பூர்வமான ஆசையாகும்" என்று கலைவாணர் ஒரு சந்தர்ப்பத்தில் எழுதி இருக்கிறர். அந்த நிலையைக் கொண்டுவர நாம் அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

மதுரம் இழந்த மாணிக்கம் நடித்த படங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு புதுக் கருத்தும், சீர்திருத்த எண்ணமும் பளிச் சிடுவதை நாம் காணலாம். பல படங்களில் அவர் அளித்துள்ள படிப்பினைகளை கடைபிடிப்போம்.

அதுவே அவருக்கு நாம் செய்யும் அஞ்சலி ஆகும்.

மணத்தில் மிகுந்தது!

ருசியில் சிறந்தது!


# ரேவதியின் காப்பிதூள்

100·/. சுத்தமானது

ஏஜெண்டுகள் விண்ணப்பிக்கவும்

## ரேவதி காப்பித்தூள் ஓர்க்ஸ்

2/23 சுப்பராயசெட்டி தெரு, : : சென்னை 21



எல்லோரும் விரும்புவது
மனம் கமிழும் மணம்!

அதனைத் தருவது

# ஜவ்வாது பத்திகள்

டிரேட்மார்க்
**அசோகா**
**51**
**501**
**5001**



அசோகா ரோஸ் வாட்டர் ஒர்க்ஸ்

18, ரவணையர் தெரு : : சென்னை 3.

Wrapper Printed at Eveready Printers, Madras-17